**செ. கு. எண்: 128** **நாள்: 31.07.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 31.7.2018</u>

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒட்டியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தனபால் என்பவரின் மகன் திரு. சேகர் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆரியபாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேசன் என்பவரின் மகன் திரு. சதாசிவம் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், ஜே. கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மகன் திரு. மாசாணி என்பவர் மின் கம்பி உரசியதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், பெதப்பம்பட்டியைச் சேர்ந்த திரு. மாயவன் என்பவரின் மனைவி திருமதி ஜெயா என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், த.சோழங்குறிச்சி மஜீரா காடுவெட்டாங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிதம்பரம் என்பவரின் மகன் திரு. கருப்பையன் என்பவர் தோட்ட வேலையின்போது அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், ராமநாதன் கோவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. பன்னீர்செல்வம் என்பவரின் மகன் திரு. தங்கபாண்டியன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், பண்ணைபுரம் கிராம உட்கடை பல்லவராயன்பட்டியைச் சேர்ந்த திரு. சின்னகருப்பன் என்பவரின் மகன் திரு. சி. பெருமாள் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் திரு. பேச்சிமுத்து என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், திருவெண்ணைநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பரமசிவம் என்பவரின் மகன் திரு. ரவிச்சந்திரன் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், மின்னாம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொம்முலு என்பவரின் மனைவி திருமதி சாத்தம்மாள் என்பவர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், பிச்சம்பாளையம் புதூரைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவர் மின்கம்பத்தை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், கீழபிள்ளையார்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஐயப்பன் என்பவரின் மகன் செல்வன் இசக்கிமுத்து என்பவர் தனது வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது Stay கம்பியை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழச்சுரண்டை பகுதியைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகன் திரு. சமுத்திரம் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், பழைய பல்லாவரம் யூனியன் கார்பைடு காலனியில் வசித்து வந்த திருமதி கமலா என்பவரின் மகன் திரு. சண்முகம் என்பவர் மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், புலியூர் கிழக்கு மதுரா சமட்டிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமமூர்த்தி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குமாரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அருண் என்பவரின் மகள் செல்வி தட்சணா என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **16** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சம்பவங்களில் உயிரிழந்த **16** நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**